**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**<u>O.S.No. 235 /2022</u>**

10.06.2025 பி.வா.சா.2 திரு. மணி

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு சொந்த ஊர் திருக்கருங்குடி என்றால் சரிதான். திருநெல்வேலி பேட்டையில் உள்ள தலவாய் செட்டியார் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தலவாய் செட்டியாரின் மனைவி பெயர் மீனாட்சி என்றால் சரியல்ல லெட்சுமி. லெட்சுமி அம்மாளை தலவாய் செட்டியார் திருமணம் செய்ததற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணைக்கான நிருபண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். வாக்கு மூலத்தை நான் சொல்ல சொல்ல எழுதிக் கொண்டார்கள் பின்னர் படித்து காட்டினார்கள்.

2) நான் வாக்குமூலத்தில் சொத்து லெட்சுமியம்மாளுக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேனா என்றால் பாத்தியம் என்று சொல்லியுள்ளேன். லெட்சுமி அம்மாள் பெயரில் ஏற்பட்ட பத்திரங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. லெட்சுமி அம்மாள் என்னிடம் சாட்சி கையெழுத்து போடுவதற்காக காட்டிய பிவாசாஆ 6 ஆவணம் தயாரித்து சுமார் 5 வருடம் இருக்குமா என்றால் 2003 ம் வருடம் சாட்சி கையெழுத்து போடுவதற்காக கூப்பிட்டார்கள். நான் சாட்சி கையெழுத்து செய்த ஆவணத்தில் கையெழுத்து செய்த சாட்சி நடராஜனை ஏற்கனவே தெரியுமா என்றால் தெரியும். பிவாசாஆ 6 ஆவணம் தயாரிப்பதற்கு முன்பே ஊர் நிர்வாக கமிட்டிக்கு தெரியுமா என்றால் ஒரு மாதத்திற்கு முன்பே தெரியும்.

3) யார் பிவாசாஆ 6 ஆவணத்தை தட்டச்சு செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தை யார் தயார் செய்தார் என்று எனக்கு

தெரியாது. எங்கு வைத்து தட்டச்சு செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பிவாசாஆ 6 ல் வணிக வைசிய சமுதாய பொது மக்களின் பயன்பாட்டிற்காக ஆவணம் எழுதப்பட்டுள்ளதாக சரத்து உள்ளது என்று சொன்னால் சரிதான் எழுதப்பட்டிருந்தது. ஆனால் மேற்படி பிவாசாஆ 6 ல் உள்ள சொத்தானது வணிக வைசிய சமுதாய பொதுமக்களின் பயன்பாட்டில் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. பிவாசாஆ 6 ல் கண்ட சொத்தை தற்போது யார் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் தெரியாது. என்னை நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தது என்றால் கண்ணன் என்பவர் அழைத்து வந்தார்.

4) கண்ணனுக்கும் தாவா சொத்திற்கு என்ன சம்பந்தம் என்று தெரியுமா என்றால் அவர் சொத்தை வாங்கியிருப்பதாக சொல்லி கூட்டி வந்தார். பிவாசாஆ 6 ல் எவ்வளவு ரூபாய் ஸ்டாம்பில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் ஸ்டாம்ப் இல்லை. பிவாசாஆ 6 ஆவணம் லெட்சுமி அம்மாள் தயார் செய்யவில்லை என்றும் அவர் கைரேகை செய்ய வில்லை என்றும் அவர் கைரேகை செய்ததை நானும் மற்றும் சாட்சியான நடராஜன் என்பவரும் பார்த்தாக சொல்வது உண்மைக்கு புரம்பானது என்று சொன்னால் சரியல்ல. பிவாசாஆ 6 ஆவணத்தில் கண்ட தேதியில் நானும், லெட்சுமி அம்மாளும், நடராஜனும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. லெட்சுமி அம்மாளுக்கும் எனக்கும் எந்த உறவு முறையும் கிடையாது என்றும் கண்ணனுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லெட்சுமி அம்மாள் துாரத்து உறவினர்.

5) பிவாசாஆ 6 ஆவணத்தில் உள்ள வருடம், தேதி ஆகியவற்றை கண்ணன் சொல்லி தயார் செய்யப்பட்ட எனது நிருபண வாக்குமூலத்தில் கையெழுத்து போடும் போது தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு போன வாய்தா தேதியே தெரியாது என்பதால் பிவாசாஆ 6 ஆவணத்தில் கண்ட தேதி கண்ணன் என்பவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. பிவாசாஆ 6 ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தை எந்த பத்திரத்தின்

அடிப்படையில் தயார் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது தட்டச்சு செய்து வைக்கப்பட்டிருந்தது அதில் கையெழுத்து செய்தேன். சாட்சி நடராஜன் என்ற நபரே கிடையாது என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.06.10 17:07:02 +0530

Principal District Munsif,
Tirunelveli.